# கார்கோசா ஸ்ரீ நெகாரா பாரம்பரிய திட்டத்தின் திறப்பு விழா



கோலாலம்பூர், பிப். 21- கார்கோசா ஸ்ரீ நெகாரா தேசிய பாரம்பரிய தளம் ஏறத்தாழ ஆறு ஆண்டு காலம் மூடுவிழா கண்டிருந்தது. இப்பாரம்பரிய கட்டட தளம் புத்தம் புதிய வடிவில் இவ்வாண்டு ஜூலை மாத வாக்கில் திறப்பு விழா காணவிருப்பதாக கூட்டரசு பிரதேசத்திற்கான பிரதமர் இலாகா அமைச்சர் ஸலிஹா முஸ்தாபா தெரிவித்தார்.

தேசிய பாரம்பரிய கட்டட தளம் புதிய வடிவில் புத்தொளியாக மணம் வீசும். நமது பாரம்பரிய தளம் தொடர்ந்து பாராட்டப்பட வேண்டும். கட்டட தளத்தை சீரமைப்பு செய்யும் பணி 2040ஆம் ஆண்டு கோலாலம்பூர் சீரமைப்பு பணிக்கு ஏற்ற ஒன்றும் இது 2025ஆம் ஆண்டு ஆசியான் மலேசியா திட்டத்திற்கு பொருத்தமானது என்றும் அமைச்சர் விவரித்தார்.

இவ்வாண்டு ஜூலை மாத வாக்கில் கார்கோசா ஸ்ரீ நெகாரா பாரம்பரிய தளத்தை சீர்படுத்தும் பணி நிறைவு கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆசியான் மாநாடுகளின் போது அந்நிய பேராளர்கள் மத்தியில் இதன் பெருமை பறைசாற்றப்படும்.

பாரம்பரிய தளத்தை மேம்படுத்தும் பணியில் கோலாலம்பூர் மாநகர் மன்றமும் கஷானா நேஷனலும் இணைந்து செயல்படுகின்றது.

நமது நாட்டின் வரலாற்று மற்றும் கலாச்சார அடையாளங்கள் இதுவெல்லாம் முன்னிலைப்படுத்துவதாக இருக்கும் என்று அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா தனது முகநூலில் விவரித்துள்ளார். கட்டட தள பகுதியினை அமைச்சர் பார்வையிடும் படம் முகநூலில் இடம் பெற்றுள்ளது.

கார்கோசா ஸ்ரீ நெகாராவை ஒரு நினைவு சின்னமாக நிலைநாட்டும் முயற்சிகளை சம்பந்தப்பட்ட ஒன்று. இத்தகைய திட்டத்தின் முதலாவது கட்டம். லிண்டோங்கான் இதே தங்கும் விடுதியை மேம்படுத்துவது திட்டத்தின் இரண்டாவது கட்டம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.